கூட்டுறவே !　　　　　　　　　　　　　　நாட்டுயர்வு !!

## கூட்டுறவுத்துறை

# கூட்டுறவு சங்கங்களின் உதவியாளர்கள் பயிற்சி கையேடு—2024

# முன்னுரை

கூட்டுறவு என்பது, தங்களது பொதுவான பொருளதார, சமூக மற்றும் கலாச்சாரத் தேவைகள் மற்றும் எதிர்பார்ப்புகளைப் பூர்த்தி செய்வதற்காக தாமாக சேர்ந்த நபர்களின் தன்னாட்சி பெற்ற கூட்டமைப்பு ஆகும். தமிழ்நாட்டில் சேவைகளை வழங்குதல், வேலை வாய்ப்பு மற்றும் நிலையான வளர்ச்சி இலக்குகளை முன்னெடுத்தல் ஆகியவற்றில் கூட்டுறவுக்கு நிரூபிக்கப்பட்ட பங்கு உண்டு. கூட்டுறவு சங்கங்கள் கிராமப்புற பொருளாதாரத்தின் முதுகெலும்பாக விளங்குவதோடு, கிராம மற்றும் நகர்ப்புறங்களில் கடன் பெறுவதற்கான வாயப்பு வழங்குகிறது.

இந்தியாவில் கூட்டுறவு இயக்கத்தின் முன்னோடியாக தமிழ்நாடு போற்றப்படுகிறது. கூட்டுறவு கடன் சங்கச் சட்டம் 1904–ஆம் ஆண்டிலேயே மாநிலத்தில் இயற்றப்பட்டது. இந்தியாவின் முதல் கூட்டுறவு கடன் சங்கம் 1904–ஆம் ஆண்டு திருவள்ளூவர் மாவட்டம் திரூரில் தொடங்கப்பட்டது. இதுபோன்று பல முதன்மைகள் மாநிலத்தில் உள்ளன. ஆண்டாண்டுகாலமாக, கூட்டுறவு அமைப்பு படிப்படியாக வளர்ச்சியடைந்து, தற்போது 17 தலைமை சங்கங்கள் 216 மத்திய சங்கங்கள் மற்றும் 22,690 தொடக்கச் சங்கங்கள், கூட்டுறவு சங்கங்களின் பதிவாளர் மற்றும் 14 செயல்பாட்டு பதிவாளர்களின் கீழ் துடிப்புடன் செயல்படுகிறது.

# பொருளடக்கம்


| வ.எண் | பொருள் | பக்க எண் |
|---|---|---|
| 1. | முன்னுரை | |
| 2. | தமிழ்நாடு கூட்டுறவு சட்ட வரலாறு | 1 |
| 3. | கூட்டுறவு கொள்கைகள் | |
| 4. | கூட்டுறவுக் கடன் அமைப்பு | 2 |
| 5. | தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி | |
| 6. | மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | 3 |
| 7. | தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம் | |
| 8. | பெரும்பல நோக்கு கூட்டுறவு சங்கங்கள் | 4 |
| 9. | நகர கூட்டுறவு கடன் சங்கங்கள் | 5 |
| 10. | நகர கூட்டுறவு வங்கிகள் | 6 |
| 11. | வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம் | 7 |
| 12. | மாவட்ட கூட்டுறவு ஒன்றியம் | 8 |
| 13. | மாவட்ட கூட்டுறவு அச்சகம் | |
| 14. | மாவட்ட கூட்டுறவு பயிற்சி நிலையம் | |
| 15. | பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கம் | 9 |
| 16. | மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டக சாலை | |
| 17. | நீரேற்று பாசன கூட்டுறவு சங்கம் | 10 |
| 18. | நிலக்குடியேற்ற கூட்டுறவு சங்கம் | |
| 19. | கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி | |
| 20. | பிரதம கூட்டுறவு பண்டக சாலை | 11 |
| 21. | பணியாளர் கூட்டுறவு பண்டக சாலை | |
| 22. | மாணவர்கள் கூட்டுறவு பண்டக சாலை | |
| 23. | பதவி படிநிலை | 12–14 |
| 24. | சங்கப் பணியாளர்களின் பொறுப்புகளும் கடமைகளும் | 15–22 |
| 25. | சங்கத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் விவரம் | 22–24 |
| 26. | பொது விநியோகத்திட்டம் | 24 |
| 27. | தணிக்கை | 25–26 |

## தமிழ்நாடு கூட்டுறவு சட்ட வரலாறு

- ❖ 1904–ம் ஆண்டு கூட்டுறவு சட்டம் (ஆங்கிலேயர்களால் உருவாக்கப்பட்டது) முக்கிய நோக்கம் – விவசாயிகளின் கடன் பிரச்சனைகளுக்கு தீர்வு காணுவது (29 பிரிவுகள்)
- ❖ 1912–ம் ஆண்டு கூட்டுறவு சட்டம் முக்கிய நோக்கம் – நாடு முழுவதும் கூட்டுறவு இயக்கங்களை பரப்புவது (56 பிரிவுகள்)
- ❖ 1912–ம் ஆண்டு கூட்டுறவு சட்டம் முக்கிய நோக்கம் – நாடு முழுவதும் கூட்டுறவு இயக்கங்களை பரப்புவது (56 பிரிவுகள்)
- ❖ 1932–ம் ஆண்டு சென்னை மாகாணம் கூட்டுறவு சட்டம் நோக்கம் – கூட்டுறவு கடன் அமைப்புகளை வலு படுத்துதல் (66 பிரிவுகள்)
- ❖ 1934–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு நிலை அடமான வங்கிகள் சட்டம் (38 பிரிவுகள்) – நிலவள கூட்டுறவு சங்கங்களை உருவாக்குதல்
- ❖ 1961–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் (122 பிரிவுகள்)
- ❖ 1983–ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவு சங்கங்கள் சட்டம் (184 பிரிவுகள்)
- ❖ 1988–ம் ஆண்டு கூட்டுறவு சட்ட விதிகள் (190 பிரிவுகள்)
- ❖ இந்திய பாராளுமன்றத்தில் 97–வது சட்டத்திருத்தம் – 2011–ன்படி கூட்டுறவு சட்டத்திற்கு அரசியல் அமைப்பு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## கூட்டுறவு கொள்கைகள்

- ❖ தன்னிச்சையாக தடையின்றி உறுப்பினராகுதல்
- ❖ ஜனநாயக முறையில் நிருவாகம்
- ❖ உறுப்பினர்களின் பொருளாதார முன்னேற்றத்தில் பங்கு
- ❖ சுயாட்சியும் சுதந்திரமும்
- ❖ கூட்டுறவு கல்வி, பயிற்சி மற்றும் தகவல் தொடர்பு
- ❖ கூட்டுறவுகளுக்கிடையே கூட்டுறவு
- ❖ சமுதாய நலனில் ஈடுபாடு

## கூட்டுறவுக் கடன் அமைப்பு

கிராமப்புற விவசாயிகள் மற்றும் கைவினைஞர்களுக்கு குறைந்த வட்டி விகிதத்தில் கடன்களை வழங்குவதில் கடன் கூட்டுறவு அமைப்புகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில், பயிர்க்கடன்கள், அதைச் சார்ந்த விவசாய நடவடிக்கைகளுக்கான கடன்கள் மற்றும் இதரக் கடன்களை அனைத்து கிராமங்கள் மற்றும் குக்கிராமங்களுக்கும் வழங்கும் கடன் கட்டமைப்புகள் இவை மட்டுமே. இம்முதன்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள் விவசாயிகளுக்கு கட்சி சார்பற்ற மற்றும் சுரண்டல் இன்றி அனைத்து ஏழை மக்களுக்கும் உரிய நேரத்தில் கடன் கிடைப்பதை உறுதி செய்து, கந்து வட்டிக்காரர்களிடமிருந்து விவசாயிகள் மற்றும் பொது மக்கள் கடன் பெறுவதைத் தவிர்ப்பதில் பெரும் பங்கு வகிக்கின்றன.

## தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி

நாட்டிலேயே மிகவும் பழமையான வங்கிகளில் ஒன்றாக தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியானது 1905—ஆம் ஆண்டு கூட்டுறவு வங்கியாக செயல்படத் துவங்கியது. இவ்வங்கி மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியாக வளர்ந்து, வேளாண்மை மற்றும் வேளாண் சாராக் கடன்களை வழங்குவதில் முக்கியப் பங்காற்றி மத்தியக் கூட்டுறவு வங்கிகளின் கூட்டமைப்பாகவும் உள்ளது. இவ்வங்கியானது நபார்டு வங்கியிடமிருந்து மறுநிதியுதவி பெற்று, மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு குறுகிய பருவகால வேளாண்மை நடவடிக்கைகளுக்கான கடன்கள், மத்திய கால வேளாண் மற்றும் வேளாண்மை சார்ந்த முதலீட்டுக் கடன்கள் மற்றும் நெசவாளர் கடன்களை வழங்கி வருகின்றது. இது மட்டுமின்றி மத்தியக் கூட்டுறவு வங்கிகளுக்கு பொதுவான வியாபாரத்திற்கும், நடைமுறை மூலதனத்திற்கும், சர்க்கரை ஆலைகளுக்கும் காசுக்கடன் வழங்கி வருகின்றது. தமிழ்நாடு மாநில கூட்டுறவு வங்கி 47 கிளைகளுடன் இயங்கி வருகிறது.

## மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் தமது செயற்பாட்டுப் பகுதிக்குட்பட்ட தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களை உள்ளடக்கிய குறுகிய காலக் கூட்டுறவுக் கடன் அமைப்பில் மத்திய அளவிலான கூட்டமைப்பு ஆகும். தமிழ்நாட்டில் 23 மத்தியக் கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவை பங்கு மூலதனம், வைப்புகள் மற்றும் இதர காப்பு நிதிகளை உள்ளடக்கிய சொந்த நிதியிலிருந்தும், தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் மூலம் நபார்டு வழங்கும் மறுநிதி உதவியிலிருந்தும் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களுக்கு நிதி உதவி அளித்து வருகின்றன. இவை தவிர, தமது செயற்பாட்டுப் பகுதியில் செயல்பட்டு வரும் அனைத்து கூட்டுறவு நிறுவனங்களுக்கும் நிதி உதவி அளித்து வருகின்றன.

இந்த 23 மத்திய கூட்டுறவு வங்கிகள் 924 கிளைகளுடன் பொது மக்களுக்கு பல்வேறு வங்கிச் சேவைகளை வழங்குகின்றன. தமிழ்நாட்டில், சேலம் மத்தியக் கூட்டுறவு வங்கி 06–01–1909–இல் தொடங்கப்பட்ட முதல் மத்திய கூட்டுறவு வங்கி ஆகும். மத்தியக் கூட்டுறவு வங்கிகள் வணிக வங்கிகளுக்கு இணையாக நவீன வங்கியியல் வசதிகளை வழங்குகின்றன.

சேலம் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கி 72 கிளைகளுடன் செயல்பட்டு வருகிறது. இதன் விவகார எல்லை சேலம் மற்றும் நாமக்கல் வருவாய் மாவட்டங்களை உள்ளடக்கியது.

## தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கம்

ஒரு நாட்டின் வளர்ச்சி கிராமத்தின் வளர்ச்சியாகும் அத்தகைய கிராமங்களில் உள்ள மக்களின் மேம்பாட்டிற்காகவும் அவர்களின் பொருளாதர முன்னேற்றத்திற்காகவும், அரசின் திட்டங்களை கிராமங்களுக்கு கொண்டு சேர்ப்பதற்காகவும் வேளாண்மை, தொழில் ஆகியவற்றினை மேண்மை அடையச் செய்ய வேண்டியும் உருவாக்கப்பட்டது தான் பிரதம கூட்டுறவு சங்கங்கள் ஆகும். தமிழ்நாட்டில் மொத்தம் 4,453 தொடக்க வேளாண்மை கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 151 கிளைகளுடன் 12,525 கிராம ஊராட்களில் பரந்து விரிந்த கட்டமைப்புடன் செயல்பட்டு வருகின்றன. சேலம் மண்டலத்தில் 204 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளது. இச்சங்கங்களில் கீழ்கண்ட வகையான கடன்கள் வழங்கப்படுகிறது.

| வ. எண். | கடன் வகைகள் |
|---|---|
| 1 | பயிர்கடன் |
| 2 | கால்நடை பராமரிப்புக்கடன் |
| 3 | நகைக்கடன் |
| 4 | மகளிர் சுய உதவிக்குழு கடன் |
| 5 | மாற்றுத் திறனாளிக் கடன் |
| 6 | தானிய ஈட்டுக் கடன் |
| 7 | மத்திய காலக்கடன் |
| 8 | டாம்கோ கடன் |
| 9 | டாப்செட்கோ கடன் |
| 10 | தாட்கோ கடன் |
| 11 | பணிபுரியும் மகளிர்களுக்கான கடன் |
| 12 | மகளிர் தொழிற் முனைவோர் கடன் |

பொது சேவை மையம் - தமிழக அரசின் கீழ் செயல்படும் பல்வேறு துறைகளின் சான்றிதழ்களை விண்ணப்பிப்பது , பதிவிறக்கம் செய்வது போன்ற பணிகளை கிராம அளவில் வழங்கி வருகிறது.

விவசாயக் கருவிகளை (ட்ராக்டர், ரொட்டவேட்டர், ஸ்பிரேயர்,) குறைந்த விலைக்கு வாடகைக்கு வழங்க பணியினை செய்து வருகிறது.

தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்களை பல்சேவை மையங்களாக மாற்றுதல் (PACCS AS MSC) திட்டத்தின் கீழ் கொள்முதல் செய்யப்பட்ட மினி டோர், 6 டன் எடை கொண்ட சரக்கு வாகனங்களை உள்ளூர் மக்களுக்கு குறைந்த விலையில் வாடகைக்கு வழங்கி வருகிறது.

## பெரும்பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்

தமிழகத்தில் 25 பெரும்பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மலைவாழ் பழங்குடியின மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்தும் பொருட்டு செயல்பட்டு வருகின்றன. மலைவாழ் மக்களின் வேளாண் உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்பை அதிகரித்தல், வேளாண்விளை பொருள் கொள்முதல் குறிப்பாக சிறுதானியங்கள், ஒருங்கிணைந்த கடன் வசதிகள் மூலம் வருவாய் அதிகரித்தல் மலைவாழ் மக்கள் உள்ளிட்ட அனைவருக்குமான பொதுவிநியோகத் திட்டத்தின்கீழ் அத்தியாவசியாப் பொருட்கள் விநியோகம் செய்தல் ஆகியவை பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதான நோக்கங்களாகும். வேளாண் இடுபொருள் விநியோகம், வேளாண் விளைபொருள் விற்பனை, சிறுவனப் பொருட்கள் சேகரிப்பு மற்றும் விற்பனை போன்ற பணிகளையும் இச்சங்கள் மேற்கொண்டு வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் 8 மலைவாழ் மக்கள் பெரும்பல நோக்க கூட்டுறவு சங்கங்கள் உள்ளது. இச்சங்கங்கள் வட்டியில்லாமல் கீழ்கண்ட வகை கடன்களை மலைவாழ் மக்களுக்காக வழங்குகிறது

| வ. எண். | கடன் வகைகள் |
|---|---|
| 1 | மகளிர் சுயஉதவி குழுக்கள் கடன் |
| 2 | மாற்றுத் திறனாளி கடன் |
| 3 | மத்திய கால கடன் |

இது தவிர கீழ்கண்ட கடன்களும் வழங்கப்பட்டு வருகிறது.

| வ. எண். | கடன் வகைகள் |
|---|---|
| 1 | பயிர்கடன் |
| 2 | கால்நடை பராமரிப்புக்கடன் |
| 3 | நகைக்கடன் |
| 4 | தானிய ஈட்டுக் கடன் |
| 5 | டாம்கோ கடன் |
| 6 | டாப்செட்கோ கடன் |
| 7 | தாட்கோ கடன் |
| 8 | பணிபுரியும் மகளிர்களுக்கான கடன் |
| 9 | மகளிர் தொழிற் முனைவோர் கடன் |

## நகர கூட்டுறவு கடன் சங்கங்கள்

தமிழ்நாட்டில் துரிதமான நகரமயமாக்கலால், நகர்ப்புறங்களில் செயல்பட்டு வந்த சில தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், வேளாண் சார்ந்த கடன்களின் மூலம் பெறப்படும் வருவாய் குறைவை எதிர்கொள்வதால், நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்களாக மாற்றம் செய்யப்பட்டு தொடர்ந்து அப்பகுதியில் வசிக்கும் உறுப்பினர்களுக்கு கடன் வழங்கி வருகின்றன. தமிழ்நாட்டில் நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் 116 நகர கூட்டுறவுக் கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. சேலம் மண்டலத்தில் 5 நகர கூட்டுற கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. நகரப் பகுதிகளில் வாழும் விளிம்பு நிலை மக்களின் நலனுக்காகவும் பொருளாதார மேம்பாட்டிற்காகவும் பல்வேறு கடன்களை அளித்து வருகிறது.

| வ. எண். | கடன் வகைகள் |
|---|---|
| 1 | பயிர்கடன் |
| 2 | கால்நடை பராமரிப்புக்கடன் |
| 3 | நகைக்கடன் |
| 4 | மகளிர் சுய உதவிக்குழு கடன் |
| 5 | மாற்றுத் திறனாளிக் கடன் |
| 6 | நுகர்வோர் கடன் |
| 7 | மத்திய காலக்கடன் |
| 8 | டாம்கோ கடன் |
| 9 | டாப்செட்கோ கடன் |
| 10 | தாட்கோ கடன் |
| 11 | பணிபுரியும் மகளிர்களுக்கான கடன் |
| 12 | சிறுதொழில் கடன் |
| 13 | வீடு அடமான கடன் |
| 14 | வீடு கட்டும் கடன் |
| 15 | மகளிர் தொழிற் முனைவோர் கடன் |
| 16 | கிஷான் விகாஷ் பத்திரங்கள் / தேசிய சேமிப்பு பத்திரங்கள் மீதான கடன் |

## நகர கூட்டுறவு வங்கிகள்

நகர கூட்டுறவு வங்கிகள், நகர் மற்றும் புறநகர் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வங்கிச் சேவைகள் மற்றும் கடன் வசதிகளை அளித்து வருகின்றன. மாநிலத்தில் தற்போது 128 நகர கூட்டுறவு வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள் பொது மக்களிடமிருந்து வைப்புகளைப் பெற்று வீடு கட்டுதல், வணிகம் மற்றும் உறுப்பினர்களின் அவசர மற்றும் சொந்த தேவைகளுக்காக நகைக்கடன் உள்ளிட்ட இதர பண்ணை சாரா காரியங்களுக்காக கடன் வசதிகளை அளித்து வருகின்றன.

வாடிக்கையாளர்களுக்கு நவீன வங்கியியல் சேவையினை அளிப்பதற்காக நகரக் கூட்டுறவு வங்கிகளில் மைய வங்கியியல் தீர்வு முறையிலான சேவைகள் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

சேலம் மண்டலத்தில் 8 நகர வங்கிகளும செயல்பட்டு வருகிறது. நகர வங்கிகள் கீழ்க்காணும் கடன்களை வழங்கி வருகிறது.

| வ. எண். | கடன் வகைகள் |
|---|---|
| 1 | நகைக்கடன் |
| 2 | மகளிர் சுய உதவிக்குழு கடன் |
| 3 | மாற்றுத் திறனாளிக் கடன் |
| 4 | நுகர்வோர் கடன் |
| 5 | மத்திய காலக்கடன் |
| 6 | டாம்கோ கடன் |
| 7 | டாப்செட்கோ கடன் |
| 8 | தாட்கோ கடன் |
| 9 | பணிபுரியும் மகளிர்களுக்கான கடன் |
| 10 | மகளிர் தொழிற் முனைவோர் கடன் |
| 11 | வீடு அடமான கடன் |
| 12 | வீடு கட்டும் கடன் |

நகர வங்கியானது தமிழ்நாடு கூட்டுறுவு துறை அலுவலர்களால் நிர்வாகிக்கப்படுகிறது. இந்திய ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டின்படியும் இயங்கி வருகிறது.

## வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கம்

சேலம் மண்டலத்தில் 3 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கங்கள் செயல்பட்டு வருகிறது. (சேலம், ஆத்துார் மற்றும் கொளத்துார்) சங்கத்தின் பிரதான நோக்கம் - அந்தந்த பகுதிகளில் விவசாயிகள் விளைவிக்கும் விளைபொருட்களை விற்பனை சங்கத்தில் வைத்து பொது ஏலத்தின் மூலம் விவசாயிகளின் விளைபொருட்களுக்கு நல்ல விலை கிடைக்க உதவுகிறது. இடைத்தரகர்களிடம் விளைபொருட்களை குறைந்த விலைக்கு விற்பனை செய்வதை தடுக்கிறது. பருத்தி, நிலக்கடலை, மஞ்சள்,மக்காச்சோளம், எள், போன்ற பொருட்கள் விற்பனை சங்கங்கள் மூலம் ஏலம் விடப்பட்டு வருகிறது. தமிழகத்தில் சேலம், திருச்செங்கோடு மற்றும் ஈரோடு போன்ற விற்பனை சங்கங்கள் மதிப்பு கூட்டப்பட்ட மசாலா பொருட்கள் மற்றும் எண்ணெய் வகைளை கலப்படமின்றி தரமான விலையில் பொதுமக்களுக்கு விற்பனை செய்து வருகிறது. மேலும் விற்பனை சங்கங்கள் நகைகடன் வழங்குதல், மருந்தகம் நடத்துதல், பெட்ரோல் வழங்கும் நிலையங்கள் போன்ற பணிகளை செய்து வருகிறது.

## மாவட்ட கூட்டுறவு ஒன்றியம்

கூட்டுறவு சங்கப் பணியாளர்களுக்கு தகுந்த பயிற்சிகளை அவ்வப்போது அளிப்பதும், கூட்டுறவு கொள்கைகளை மக்களுக்கு கொண்டு செல்வதும், இதன் பிரதான நோக்கமாகும். இந்நிறுவனம் தமிழ்நாடு மாநில கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது.

## மாவட்ட கூட்டுறவு அச்சகம்

மாவட்ட அளவில் 26 கூட்டுறவு அச்சகங்கள் செயல்பட்டு வருகின்றன. இக்கூட்டுறவு அச்சகங்கள் மாவட்டத்தில் உள்ள கூட்டுறவு நிறுவகங்களின் அச்சுத் தேவையை பூர்த்தி செய்வதுடன் அருகிலுள்ள மாவட்டங்களில் கூட்டுறவு அச்சகம் இல்லாத நேர்வில் அம்மாவட்டங்களின் அச்சுத் தேவைகளையும் பூர்த்தி செய்து வருகின்றன. தனியார் அச்சங்கங்களுக்கு இணையாக 14 கூட்டுறவு அச்சகங்களின் நவின இயந்திரங்கள் நிறுவப்பட்டு அச்சுப்பணி மேம்படுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக அச்சுப் பணி ஆணைகளை அரசு, அரசு சார்பு நிறுவனங்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் தனியார்களிடமிருந்து பெறப்பட்டு நிறைவேற்றப்படுகிறது.

## மாவட்ட கூட்டுறவு பயிற்சி நிலையம்

சேலத்தில் நாச்சியப்பா கூட்டுறவு மேலாண்மை நிலையம் காமராஜர் காலனி, அம்மாபேட்டை என்ற முகவரியில் இயங்கி வருகிறது. இந்நிறுவனம் தமிழ்நாடு மாநில கூட்டுறவு ஒன்றியத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. தற்போது முழுநேர ஒரு வருட கூட்டுறவு மேலாண்மை பட்டய பயிற்சி, பகுதிநேர / அஞ்சல் வழி கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சி, நாச்சியப்பா தொழிற் கூட்டுறவு பயிற்சி நிலையத்தில் (ITI ) மூலம் ஒருவருட உணவு தயாரித்தல் (பொது) பயிற்சியும், துறை அலுவலர்களுக்கான குறுகிய கால பயிற்சியும், இளநிலை ஆய்வாளர்களுக்கான பொது அடிப்படை பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது. இரண்டு மாதங்கள் கொண்ட 100 மணிநேரம் உடைய நகை மதிப்பீட்டாளர் பயிற்சியும் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் அரசால் அறிவிக்கப்படும் பயிற்சிகளை துறைச்சார்ந்த அலுவலர்களுக்கும், சங்கப் பணியாளர்களுக்கும் வழங்கி வருகிறது.

## பணியாளர்கள் கூட்டுறவு சிக்கன நாணய சங்கம்

தமிழ்நாட்டில் 1715 பணியாளர் கூட்டுறவு சிக்கன மற்றும் கடன் சங்கங்கள் மாநில மற்றும் மத்திய அரசுப் பணியாளர்கள், அரசு சார்ந்த மற்றும் தனியார் நிறுவனங்களின் பணியாளர்கள் பயன் பெறும் வகையில் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் முதன்மை நோக்கங்கள் பணியாளர்களிடையே சேமிப்புப் பழக்கத்தை உருவாக்குவதும் நியாயமான வட்டி விகிதத்தில் அவர்களுக்கு கடன்கள் வழங்குவதும் ஆகும்.

இச்சங்கமானது விவகார எல்லைக்குட்பட்டு உறுப்பினர்களாக சேர்க்கப்பட்டு, உறுப்பினர்களுக்கு மத்திய கால கடன் வழங்கப்பட்டு வருகிறது. கடன் தொகை அதிகபட்சமாக ரூ.15 இலட்சம் வரை வழங்கப்பட்டு வருகிறது. தவணையானது 120 மாத தவணைகளில் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் சங்கமானது உறுப்பினர் மற்றும் இணைஉறுப்பினரிடமிருந்து இட்டுவைப்பு பெறப்படுகிறது. மேலும் சங்கத்தில் இணை உறுப்பினர்கள் சேர்க்கப்பட்டு இணை உறுப்பினர் ஒருவருக்கு நகைக்கடன் அதிகபட்சமாக ரூ. 20 இலட்சம் வரை 12 மாத தவணைகளில் வழங்கப்பட்டு வருகிறது. சேலம் மண்டலத்தில் மொத்தம் 97 பணியாளர் கூட்டுறவு நாணய சங்கங்கள் இயங்கி வருகிறது.

## மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலை

தமிழ்நாட்டில் தற்போது 40 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் மாவட்ட அளவில் செயல்படுகின்றன. வெளிச் சந்தையில் மக்கள் அன்றாடம் பயன்படுத்தப்படும் உணவு பொருட்களின் விலையினை கட்டுப்படுத்த உதவுகிறது. வெங்காயம், தக்காளி, துவரம்பருப்பு போன்ற பொருட்கள் அதிக விலையேற்றத்தின்போது பொதுமக்களுக்கு குறைந்தவிலையில் விற்பனை செய்வதே கூட்டுறவு சங்கத்தின் நோக்கமாகும். வெளிச் சந்தையில் உணவு பொருட்களின் விலை ஏற்றத்தினை கட்டுப்பாட்டில் வைப்பதற்கு மொத்த விற்பனை பண்டகசாலை உதவுகிறது. பொது விநியோக திட்டத்தில் முதன்மை சங்கமாக செயல்பட்டு நியாய விலை கடைகளுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை நகர்வு செய்யும் பணியினை மேற்கொண்டு வருகிறது. 20 சதவீத தள்ளுபடி விலையில் கூட்டுறவு மருந்தகங்கள், உழவர் சந்தைகயில் காய்கறி கடைகள், பெட்ரோல் வழங்கும் நிலையம், எரிவாயு உருளை வழங்குதல், பல்பொருள் அங்காடி, எழுதுபொருட்கள் பிரிவு, சிற்றுண்டி பிரிவுகளை நடத்தி வருகிறது.

## நீரேற்று பாசன கூட்டுறவு சங்கம்

ஆற்றிலிருந்து ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் உள்ள விவசாயிகள் ஒன்றிணைந்து ஆற்று படுகையில் கிணறு அமைத்து மின் இணைப்பு பெற்று அந்த கிராமத்திற்கு குழாய் மூலம் நீரினை கொண்டு சென்று சங்க உறுப்பினர்களின் நிலங்களுக்கு முறை வைத்து பாசனத்திற்கு நீர் வழங்குவதே சங்கங்களின் பிரதான நோக்கம். பொதுப்பணித்துறை அரசாணையில் இடம்பெற்றுள்ள உறுப்பினர்கள் மற்றும் நிலத்தின் சர்வே எண் மட்டுமே நீர்பாசனம் அளிக்க இயலும். புதிய உறுப்பினர்களை சேர்க்கவோ பழைய உறுப்பினர்களின் மற்ற நிலங்களுக்கு நீர் பாசனம் அளிக்க இயலாது. சேலம் மண்டலத்தில் ஒரு சங்கம் செயல்பட்டு வருகிறது.

## நிலக்குடியேற்ற கூட்டுறவு சங்கம்

மாவட்ட நிர்வாகத்திடமிருந்து தரிசு நிலங்களை பெற்று ஒரு குறிப்பிட்ட சமுதாய மக்களுக்கு தலா 5 ஏக்கர் வீதம் பிரித்து வழங்குவதே பிரதான நோக்கம். பிரித்து வழங்கிய நிலத்தில் தரிசு நிலத்தை மேம்படுத்தி விவசாயம் செய்வதற்கு உரிமை உண்டு. குடும்பத்தில் வாரிசு இல்லையெனில் நிலத்தினை மீண்டும் சங்கத்தில் ஒப்படைக்கப்பட வேண்டும். சங்கத்தின் உறுப்பினர்களிடமிருந்து குறைந்துபட்ச நிலவரி வருவாய் பெற்று சங்கம் செயல்பட வேண்டும். சேலம் மண்டலத்தில் 2 சங்கங்கள் செயல்பட்டு வருகிறது.

## கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி

மாநிலத்தில் 180 தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள் தற்போது தங்களிடம் உள்ள சொந்த நிதியிலிருந்தும், தமிழ்நாடு கூட்டுறவு மாநில வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியிடமிருந்து மறுநிதியுதவி பெற்று நகைக்கடன்களை வழங்கி வருகின்றன. சேலம் மண்டலத்தில் 6 கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி செயல்பட்டு வருகிறது. பிரதம நிலவள அடமான வங்கியாக துவங்கப்பட்டு பின்னர் நிலவளவங்கியாக மாற்றம் செய்யப்பட்டு, தற்போது கூட்டுறவு தொடக்க வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி என்ற பெயரில் செயல்பட்டு வருகிறது.

## பிரதம கூட்டுறவு பண்டகசாலை

தொடக்கக் கூட்டுறவு பண்டகசாலைகள் தொடக்க நிலையில் செயல்பட்டு அத்தியாவசிய நுகர்வுப்பொருட்களை நியாயமான விலையில் பொதுமக்களுக்கு வழங்கி வருகின்றன. இவை சில்லறை விற்பனை அங்காடிகள், பெட்ரோல் மற்றும் டீசல் விற்பனை நிலையங்கள், மாவு அரவை அலகுகள், மசாலப்பொருட்கள் அரவை அலகுகள், சீகைக்காய் அரவை அலகுகள் மற்றும் நியாய விலைக்கடைகளை நடத்தி வருகின்றன. தமிழ்நாட்டில் 363 தொடக்க கூட்டுறவு பண்டகசாலைகள் செயல்பட்டு வருகிறது. சேலம் மண்டலத்தில் 5 கூட்டுறவு பண்டகசாலைகள் செயல்பட்டு வருகிறது. சில பிரதம் பண்டகசாலைகள் ஆவின் நிறுவனத்தின் பால்முகவர்களாக செயல்பட்டு வருகிறார்கள்.

## பணியாளர் கூட்டுறவு பண்டகசாலை


சேலம் மண்டலத்தில் 9 பணியாளர்கள் கூட்டுறவு பண்டகசாலைகள் செயல்பட்டு வருகிறது. அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களில் பணிபுரியும் பணியாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் அந்நிறுவனத்தின் வளாகத்திலேயே செயவ்பட்டு வருகிறது.

## மாணவர்கள் கூட்டுறவு பண்டகசாலை


சேலம் மண்டலத்தில் 11 மாணவர்கள் கூட்டுறவு பண்டகசாலைகள் செயல்பட்டு வருகிறது. கல்லுாரிகளில் பயிலும் மாணவர்களுக்கு தேவையான எழுதுபொருட்கள் தரமாகவும் குறைந்த விலையில் வழங்கும் நோக்கில் உருவாக்கப்பட்டது.

தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறையின் கீழ் உள்ள கூட்டுறவு சங்கங்கள் அரசாணைகள், பதிவாளரின் சுற்றறிக்கைகள், சங்கத் துணை விதி ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அறிவுரைகளின்படி செயல்படவேண்டும்.


## பதவி படிநிலை


இணைப்பதிவாளர்
சரக துணைப்பதிவாளர்
துணைப்பதிவாளர் (பொ.வி.தி.)
சேலம் சரக துணைப்பதிவாளர்
ஓமலூர் சரக துணைப்பதிவாளர்
சங்ககிரி சரக துணைப்பதிவாளர்
ஆத்தூர் சரக துணைப்பதிவாளர்

# பதவி படிநிலை


சரக
துணைப்பதிவாளர்
கண்காணிப்பாளர்
முதுநிலை ஆய்வாளர் / கள அலுவலர்கள்
இளநிலை உதவியாளர்
அலுவலக உதவியாளர்
கூட்டுறவு சார்பதிவாளர் / கள அலுவலர்கள்
இளநிலை ஆய்வாளர்
தட்டச்சர்

## பதவி படிநிலை


துணைப்பதிவாளர் (பொ.வி.தி.)
கண்காணிப்பாளர்
முதுநிலை ஆய்வாளர் / பொ.வி.தி. வட்டார அலுவலர்கள்
இளநிலை உதவியாளர்
அலுவலக உதவியாளர்
கூட்டுறவு சார்பதிவாளர் / பொ.வி.தி. வட்டார அலுவலர்கள்
இளநிலை ஆய்வாளர்
தட்டச்சர்

## சங்கப் பணியாளர்களின் பொறுப்புகளும், கடமைகளும்

**செயலாளர் :**

❖ 1983ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 2 (19)ல் அலுவலர் என வகைப்படுத்தப்பட்டுள்ளவாறும், சங்கத் துணைவிதிகள் மற்றும் தனித்துணை விதிகளில் வகுத்தமைக்கப்பட்டுள்ள பணியினை நிறைவேற்றக் கூடியவராகவும் இருத்தல்.

❖ சங்கத்திற்கு சொந்தமான அனைத்து வகையான அசையும் மற்றும் அசையாச் சொத்துக்களை பாதுகாத்தல், அவைகளின் மதிப்பிற்கேற்ப ஆண்டு தோறும் காப்புறுதி செய்தல், அவை தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் பத்திரமாக பாதுகாத்தல்.

❖ சங்கப் பணியாளர்களின் பணியமைப்பு தொடர்புடைய அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ளுதல், அனைத்துப் பணியாளர்களின் பணிகளை கண்காணித்தல், அவர்களுக்கு வழங்க வேண்டிய நிதிப் பயன்களை அரசாணை/பதிவாளர் அனுமதித்துள்ள அளவிற்குள் செயலாட்சியர் அனுமதி பெற்று வழங்குதல்.

❖ அனைத்துப் பணியாளர்களையும் திறம்பட பணிபுரிய பணித்தல் குறைகள் காணப்படின் அதனை செயலாட்சியர் கவனத்திற்கு கொணர்ந்து தக்க ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள வகைசெய்தல். வருகைப் பதிவேட்டுப்படி பணியாளர்கள் வருகையை கண்காணித்தும் அவர்கள் விடுப்பில் செல்லும் நாட்களில் சங்கப் பணிகள் உறுப்பினர் / பொதுமக்கள் சேவை பாதிக்காத வகையில் மாற்று ஏற்பாடுகள் செய்து பணிபுரிதல்.

❖ சங்கம் தொடுக்கும் வழக்குகளிலும் அல்லது சங்கத்திற்கு எதிரான வழக்குகளிலும் சங்கத்தின் சார்பில் பதவி வழியில் நின்று வழக்காடுதல், எதிர்வழக்காடுதல்.

❖ சங்கம் வழங்கும் அனைத்து வகையான ரொக்கம் மற்றும் ஈடு ரசீதுகள் அனைத்து வகையான இட்டுவைப்பு சான்றுகளில் கையொப்பமிட்டு வழங்குதல்.

❖ சங்கத்தின் கையிருப்பிற்கு பொறுப்பு வகித்தல், துணைவிதிகளில் அனுமதிக்கப்பட்டுள்ள அளவிற்குள் மட்டும் கையிருப்பை வைத்துக்கொண்டு மிகு நிலையை மத்திய வங்கி கிளையில் தொடர்புடைய ஆதாரக்குறைவு ஏற்படாத வகையில் இருசால் செய்தல்.

❖ சங்கத்தால் மேற்கொள்ளப்படும் செலவுகளில் சட்டப்பூர்வ செலவுகள் தவிர இதர அனைத்து செலவினங்களிலும் ரூ. 100/–க்கு உட்பட்ட செலவுகளை மட்டும் அனுமதித்தல் ரூ. 100/–க்கு மேற்பட்ட செலவினங்களை தலைவர் நிர்வாக அனுமதி பெற்று வழங்குதல்.

- நகைக்கடனுக்கு ஈடாகப் பெறப்படும் தங்க நகைகளின் இருப்பிற்கு செயலாளர், உதவி செயலாளருடன் கூட்டுப் பொறுப்பு வகிப்பார். நகைப் பெட்டக சாவிகளை இரட்டைப் பூட்டு முறையில் இருவரும் கூட்டாக பராமரித்து வர வேண்டும். தினசரி நகை இருப்பு பதிவேட்டில் / சிட்டாவின்படி இருக்க வேண்டிய இருப்பிற்கும் கூடுதல்/குறைவிற்கும் இவ்விருவரும் கூட்டுப் பொறுப்பாவார்கள்.

- கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதிகள், துணைவிதிகள் பதிவாளர் மற்றும் அரசின் நிலையில் உள்ள மற்றும் அரசினால் அவ்வப்போது பிறப்பிக்கப்படுகின்ற ஆணைகளுக்குட்பட்டு உறுப்பினர் சேர்க்கை/நீக்கம் குறித்த பணிகளை செயலாட்சியர் ஒப்புதல் பெற்று மேற்கொள்ளுதல்.

- பதிவாளர் மற்றும் மததிய கூட்டுறவு வங்கியினால் அவ்வப்போது பிறப்பிக்கப்படும் சுற்றறிக்கைகளுக்குட்பட்டு நகைக்கடன் வழங்குதல், நகை மதிப்பினரால் எழுதப்படும் நகை மதிப்புச் சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ள நகையின் தரம், மொத்த எடை, நிகர எடை, மார்க்கெட் மதிப்பு மற்றும் கடன் அனுமதிக்கும் தொகை ஆகியவற்றை சரிபார்த்து சரியாக உள்ளதை உறுதி செய்து நகைக்கடன் வழங்குதல்.

- நகை ஈட்டுக் கடன்களின் தவணை தேதிக்கு முன்பாக அறிவிப்பு அனுப்புதல், தவணை தவறிய நகைக்கடன்களின் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல் ஆகியவற்றை கண்காணித்தல்.

- சங்கத்தின் விவகார எல்லையில் உள்ள உறுப்பினர்களுக்கு துணை விதிகளில் சொல்லப்பட்டுள்ள அல்லது அரசு மற்றும் பதிவாளரால் அவ்வப்போது குறிப்பிடும் காரியங்களுக்கு உரிய வழிமுறைகளுக்குட்பட்டு கடன் மனு தயார் செய்து செயலாட்சியர் ஒப்புதல் பெற்று கடன் வழங்குதல், கடன் வசூல் பணியில் ஈடுபடுதல், தவணை தவறிய கடன்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

- உரம் மற்றும் பூச்சி மருந்துகளின் தேவைக்கேற்ப தேவைப்பட்டியல் தயார் செய்து தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம் மூலம் கொள்முதல் செய்து விற்பனை மற்றும் இருப்பினைக் கண்காணித்தல், காலாவதியாகும் இருப்பிற்கு உரவிற்பனையாளருடன் சேர்ந்து கூட்டுப் பொறுப்பு வகித்தல்.

- நகை, விதை, உரம், பூச்சிமருந்து குடிமைப் பொருள் உரிமங்கள் புதுப்பித்தல், முத்திரை கட்டணம் மற்றும் இதர வரிகளைத் தாமதமின்றி செலுத்துதல், அபாய ஒலிப்பான், தொலைபேசி, மின் இணைப்பு, கணினி இயக்கப் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ளுதல் இப்பணிகளை உரிய காலக் கெடுவிற்குள் சட்ட நெறிகளின்படி முறையாக நிறைவேற்றுதல்.

❖ உறுப்பினர்களிடமிருந்து குறைந்த செலவில் வைப்பீடுகள் பெற்று அதிக வருமானம் ஈட்டக்கூடிய வகைகளில் முதலீடு செய்தல், நிதி விளிம்பு, நிதி திருப்பம், நானாவித வருமானம், அபாய நிலைச் செலவுகள், நடவடிக்கை செலவுகள், நிதிச் செலவுகள் ஆகிய இனங்களை கருத்தில் கொண்டு வைப்பீடு பெறுதல்.

❖ வைப்பீடுகளின் மீதான முன்பணம் வழங்குதல், முதிர்வு தொகையை திருப்பித் தருதல் போன்ற இனங்களில் பிரச்சனைகள் எழாத வண்ணம் தீர்வு செய்தல்.

❖ சங்க முன்னேற்றத்திற்கு துறை மற்றும் மத்திய வங்கியால் நிர்ணயிக்கப்படும் குறியீட்டினை அனைத்துப் பணியாளர்களின் ஒத்துழைப்புடன் அடைதல், அதற்கு அனைத்துப் பணியாளர்களையும் தனித்தனியாகவும், கூட்டாகவும் பொறுப்பு மேற்கொள்ள பணித்தல்.

❖ துறை மற்றும் மத்திய வங்கியால் பிறப்பிக்கப்படும் சுற்றறிக்கைகளை கோப்புகளில் பராமரித்து பாதுகாத்தல், அவைகளில் புள்ளி விவரங்கள் அறிக்கைகள், கேட்கப்பட்டிருப்பின் அவற்றை தாமதமின்றி காலக்கெடுவிற்குள் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல் கூட்டப் புள்ளி விவரங்கள் மற்றும் உயர் அலுவலர்கள் கோரும் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.

❖ ஆய்வு மற்றும் தணிக்கை குறைகளை நிவர்த்தி செய்து உரிய முறையில் அறிக்கையிடுதல், தணிக்கைக்கு தேவையான கணக்குகளை தயார்செய்து கூட்டுறவுச் சட்டம் விதி 101ல் வகுத்தமைக்கப்பட்டுள்ள படிவம் எண்.34ல் நிதிநிலை அறிக்கை சாற்று செய்தல்.

❖ நியாய விலைக் கடைகளை மாதமிருமுறை ஆய்வு செய்தல், ஆய்வின் போது காணப்படும் குறைகளை நிவர்த்தி செய்தல், கடும் குறைகளை செயலாட்சியர் கவனத்திற்கு கொண்டு வந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளச் செய்தல்.

❖ நியாய விலைக் கடையுடன் இணைக்கப்பட்டுள்ள குடும்ப அட்டைகளுக்கு தேவையான அளவிற்கு ஒதுக்கீட்டின்படி பொருட்கள் அங்காடிக்கு நகர்வு செய்யப்படுவதையும், அவைகள் நிர்ணயிக்கப்பட்ட நிறைகளில் நிர்ணயித்த விலையில் புகார் எழாத வண்ணம் சீராக விநியோகம் நடைபெறுவதைக் கண்காணித்தல்.

❖ விற்பனையாளர்கள் விடுப்பில் செல்லும் நாட்களில் விநியோகம் பாதிக்காத வண்ணம் மாற்று ஏற்பாடுகளைச் செய்தல், இணைப்பதிவாளர், துணைப்பதிவாளர் (பொவிதி), சரகத் துணைப்பதிவாளர் மற்றும் வழங்கல் துறையினரால் பிறப்பிக்கப்படும் ஆணைகளைச் செயல்படுத்துதல்.

❖ நியாய விலைக் கடைகளை கீழ்க்காணும் சட்டம் மற்றும் விதிகளின்படி தாவா எழாத வண்ணம் கண்காணிக்க வேண்டும்.

1. சென்னை கடைகள் மற்றும் நிறுவனங்கள் சட்டம்
2. சென்னை கடைகள் மற்றும் அளவைகள் சட்டம்
3. உணவு கலப்பட தடுப்புச் சட்டம்
4. அத்தியாவசியப் பொருட்கள் சட்டம்
5. பொருள் விற்பனைச் சட்டம்
6. மருந்து மற்றும் அழகுப் பொருட்கள் சட்டம்
7. மருந்து கட்டுப்பாடு சட்டம்
8. இந்திய தர நிர்ணய நிறுவனங்கள் சட்டம்
9. நுகர்வோர் பாதுகாப்புச் சட்டம்
10. தகவல் அறியும் உரிமைச் சட்டம்

❖ 1983ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப்பிரிவு 78ன்படி வருங்காலவைப்பு நிதி மற்றும் சட்டப்பிரிவு 79ன்படி பணிக் கொடை ஏற்படுத்துதல், ஊதியப்பிடித்தம் செய்தல், இவற்றை முறையாக தொடர்புடைய கணக்குகளில் செலுத்துவதைக் கண்காணித்தல்.

❖ தினசரி சங்க வரவு செலவுகளை கண்காணித்தல், அனைத்து வகையான சிட்டா, ரொக்கப்புத்தகம், ஆகியவற்றை சரிபார்த்து இறுதி இருப்பிற்கு நாணயவரி சிட்டை பதிவு செய்து அனைத்து பதிவேடுகளிலும் ஒப்பமிடுதல் மற்றும் சங்கத்தின் ரொக்க நகர்வுகளைக் கண்காணித்தல்.

❖ பொதுப்பேரேட்டில் தினசரி நிலுவைகளை பதிந்து மாதாந்திர வரவு செலவு பட்டியல் தயார் செய்வதைக் கண்காணித்தல் அதற்கு நிர்வாக அனுமதி பெறுதல்.

❖ ஆண்டுத் தணிக்கை அறிக்கை பெற்று, ஆண்டறிக்கை, ஆண்டு வரவு செலவுத் திட்ட அறிக்கை தயார் செய்தல், பேரவைக் கூட்டத்தை கூட்டுவதற்கு நிர்வாக அனுமதி பெறுதல் அரசு ஆணைப்படி நிர்வாகக் குழு இயக்குநர் தேர்தல் தொடர்பான பணிகளை மேற்கொள்ளுதல்.

❖ 1988ம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் விதி எண்.20 மற்றும் 21ல் குறிப்பிட்டுள்ளவாறு சங்கத்தின் அனைத்து ஆவணங்கள் மற்றும் பதிவுறுகளை பாதுகாத்தல், பாதுகாப்பாக வைத்திருக்க ஏற்பாடுகள் செய்தல் மற்றும் அவைகளைக் கண்காணித்தல்.

❖ சங்கத்திற்கு தேவையான புத்தக பாரங்களை தேவைப்பட்டியல் தயார் செய்து நிர்வாக அனுமதி பெற்று தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகளில் விதி 73ன்படி கூட்டுறவு அச்சகத்தில் கொள்முதல் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

❖ 2005ம் ஆண்டு தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் உதவி பொது தகவல் அலுவலராக இருந்து தகவல் கோரும் மனு பெறப்பட்ட நாளிலிருந்து 30 தினங்களுக்குள் செயலாட்சியர் / பொது தகவல் அலுவலர் அனுமதியுடன் உரிய தகவல் அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

❖ துறை / மத்திய வங்கி மற்றும் உயர் அலுவலர்கள் கூட்டும் ஆய்வுக் கூட்டங்களில் கலந்து கொள்ளுதல், உயர் அலுவலர்கள் கோரும் புள்ளி விபரங்களை உடனுக்குடன் சமர்ப்பித்தல் அனைத்து பணியாளர்களுடன் சேர்ந்தும், தனித்தும் வைப்பீடு சேகரித்தல், கடன் வசூல் பணியை மேற்கொள்ளுதல், சங்கப் பணிகள் தொடர்பாக செயலாட்சியர் அவ்வப்போது எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும் பிறப்பிக்கும் பணிகளை மேற்கொள்ளுதல்.

**<u>உதவி செயலாளர் :</u>**

❖ செயலாளர் விடுப்பில் / முகாம் செல்லும் நாட்களில் செயலாளர் பணியை கூடுதல் பொறுப்பாக பேணுதல்.

❖ நகைக்கடனுக்கு ஈடாகப் பெறப்படும் தங்க நகைகளின் இருப்பிற்கு உதவி செயலாளர், செயலாளருடன் கூட்டுப் பொறுப்பு வகிப்பார். நகைப் பெட்டக சாவிகளை இரட்டைப் பூட்டு முறையில் இருவரும் கூட்டாகப் பராமரித்து வர வேண்டும். தினசரி நகை இருப்பு பதிவேட்டில் / சிட்டாவின்படி இருக்க வேண்டிய இருப்பிற்கும் கூடுதல் / குறைவிற்கும் இவ்விருவரும் கூட்டுப் பொறுப்பாவார்கள்.

❖ சங்கத்தின் கையிருப்பிற்கு செயலாளருடன் கூட்டுப் பொறுப்பு வகித்தல், சங்கத்தின் ரொக்க நிதி நகர்வுகளைக் கண்காணித்தல்.

❖ அனைத்து வகையான வரவுகளையும், செலுத்து சீட்டுகளில் குறிப்பிட்டுள்ளபடி எண்ணி சரிபார்த்து பெற்று பணம் பெறப்பட்டது' என முத்திரை பதித்து சுருக்கொப்பமிட்டு செயலாளர் ஒப்புதலுக்கு வைத்தல்.

❖ சங்கம் மேற்கொள்ளும் சட்டப்பூர்வமான செலவுகள் தவிர இதர செலவினங்கள் ரூ. 100/–க்கு உட்பட்ட செலவுச் சீட்டுகளில் செயலாளரின் வழங்காணை பெற்றும், ரூ. 100/–க்கு மேற்பட்ட செலவுச் சீட்டுகளில் செயலாட்சியர் வழங்காணை பெற்றும் பணம் வழங்கப்பட்டது' என்ற முத்திரை பதித்து உரியவர்களிடம் பணம் வழங்குதல்.

❖ சங்கத்திற்கு வரவாகும் அனைத்து வகை ரசீதுகளிலும் கணக்குத் தலைப்பு அசல், வட்டி, செலவு இனங்களை சரிபார்த்து பூர்த்தி செய்து தொடர்புடைய கணக்கு பதிவேட்டு பக்கங்களைப் பதிவு செய்து சுருக்கொப்பமிட்டு செயலர் ஒப்பமும் பெறுதல்.

❖ அரசாணை, பதிவாளர் மற்றும் மத்திய வங்கி சுற்றறிக்கைகளுக்குட்பட்டும், ஆண்டுக்கடன் அளவு மனுவில் அல்லது மத்திய கூட்டுறவு வங்கி வழிகாட்டு நெறிகளில் குறிப்பிட்டுள்ளவாறு ஆண்டுக்கடன் மனு தயார் செய்தல், அனைத்து வகையான படிவங்களைப் பூர்த்தி செய்தல், மத்திய வங்கி கிளையில் பட்டுவாடா பெறுதல், கடன் தொடர்பான பதிவேடுகளில் பதிவுகளைச் செய்தல், பட்டுவாடா பதிவேட்டில் ஒப்பம் பெறுதல், நில அடங்கல் பதிவேடு பராமரித்தல் கடன் வசூல் பணியில் ஈடுபடுதல்.

❖ சங்கத்தின் அனைத்து வரவுகளையும், செலவுகளையும் நாள்வழிப்பேரேட்டில் விடுதலின்றி பதிவு செய்து கணக்கெழுதி இருப்பு முடித்து செயலாளரின் ஒப்பம் பெற வேண்டும். கணக்கு வைப்பு முறையில் ஏற்படும் கூடுதல் / குறைவுக்கு முழுப் பொறுப்பு வகித்தல்.

❖ அனைத்து வகை சிட்டாக்களை முடித்து, துணை நாள் வழிப்பேரேடு, நாள்வழிப்பேரேடு, பொதுப்பேரேடு பதிவு செய்து மாத இறுதியில் வரவு செலவு அறிக்கை தயார் செய்து தலைவர் ஒப்புதல் பெறுதல்.

❖ அனைத்து வகையான செலவுச் சீட்டுகளிலும் விடுதலின்றி வரிசை எண்ணிட்டு மாத வாரியாக அடுக்கி வைத்து தம் பொறுப்பில் வைத்திருக்க வேண்டும்.

❖ சங்கத்தின் கடன் கணக்குகளை, உறுப்பினர் நிலுவையுடனும், மத்திய வங்கி நிலுவையுடனும், பேரேட்டு நிலுவையுடனும் ஒப்பிட்டு சரிபார்த்து பதிவேட்டு இருப்பில் கூடுதல் / குறைவு இல்லாத வகையில் நேர் செய்தல்.

❖ தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டப் பிரிவு 80 விதி 101ல் படிவம் 34ல் கண்டுள்ளவாறு தணிக்கை முடிக்க தேவையான இணைப்புகள் தயார் செய்தல் மற்றும் தணிக்கை, ஆய்வு குறிப்புகள் தயார் செய்தல்.

❖ கூட்டுறவுச் சங்கங்களின் விதி 101, 102 மற்றும் 103ல் வகுத்தமைக்கப்பட்டுள்ள நெறிகளுக்குட்பட்டு தணிக்கை முடிக்க தேவையான பணிகளை மேற்கொள்ளுதல்.

❖ துறை / மத்திய வங்கி அலுவலர்கள் கோரும் புள்ளி விபரங்களையும், அனைத்து வகையான கூட்டப் புள்ளி விபரங்களையும் தயார் செய்து செயலாளர் ஒப்பம் பெற்று வழங்குதல்.

❖ சங்கத்தின் உள்வருகை அஞ்சல்களுக்கும், வெளிச் செல்லுகை அஞ்சல்களுக்கும் தேவையான பதிலுரைகளை செயலாளர் மற்றும் செயலாட்சியரைக் கலந்தாலோசித்து தயார் செய்தல்.

- ❖ அங்கத்தினர்களுக்கு வழங்க வேண்டிய பங்கு ஈவு மற்றும் சிக்கன நிதிக்கான வட்டி ஆகியவற்றை பதிவாளர் சுற்றறிக்கை படி கணக்கிட்டு வழங்குவதற்கு பட்டியல் தயார் செய்தல்

- ❖ பயிர்க்கடன்கள், விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த காலமுறைக் கடன்கள், பண்ணைசாராக் கடன்கள் வங்கியின் ஈட்டுக்கடன்கள், தனி நபர் கடன்கள் கைவினைஞர்கள், கைத்தொழில் புரிவோர், சிறுவியாபாரிகள், பெண்கள், மகளிர் சுய உதவிக்குழுக்கள், கூட்டுப் பொறுப்பு குழுக்கள், நலிவடைந்த பிரிவினர், பதப்படுத்துதல், காப்பீடு, கணினி சேவை மற்றும் புதிய வகை கடன் வழங்க தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

- ❖ மேற்சொன்ன பணிகள் தொடர்பான பதிவேடுகள் மற்றும் கோப்புகளையும் பொறுப்பில் பாதுகாத்தல்.

- ❖ அனைத்துப் பணியாளர்களுடன் சேர்ந்தும் தனித்தும் வைப்பீடு சேகரிப்பு மற்றும் கடன் வசூல் பணியினை மேற்கொள்ளுதல், சங்கப் பணிகள் தொடர்பாக செயலாட்சியர் அவ்வப்போது எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும், பிறப்பிக்கும் பிற பணிகளை மேற்கொள்ளுதல்.

<u>**எழுத்தர் :**</u>

- ❖ செயலாளர் / உதவி செயலாளர் விடுப்பில் செல்லும் நேர்வுகளில் நகைப் பெட்டக சாவி கையிருப்பு பொறுப்பு ஆகியவற்றை செயலாளருடன் அல்லது உதவி செயலாளருடன் சேர்ந்து கூட்டாக வரவு செலவு செய்தல் சம்பந்தப்பட்ட பொறுப்பு சாவியை ஒப்படைப்பு பதிவேட்டில் ஒப்பமிட்டு பெற்று பணிகளை மேற்கொள்ளுதல்.

- ❖ நகைக்கு ஈடாக வழங்கப்படும் நகைக்கடன்களுக்கு கடன் பேரேடு, கடன் பட்டுவாடா ஜாபிதா, நகை இருப்பு பதிவேடு நகைகள் திருப்பம் தொடர்பான பேரேட்டு பதிவுகள் கடன் பத்திரங்கள் மற்றும் நகைகடன் தொடர்பான அனைத்து பதிவேடுகளையும் பராமரித்தல்.

- ❖ நகைக்கடன் தவணை தவறிய நிலுவை விபரப் பதிவேடு பராமரித்தல், தவணை தவறிய கடன்தாரர்களுக்கு உரிய காலத்தில் அறிவிப்பு அனுப்புதல், நாளிதழ் விளம்பரம் செய்தல், ஏல நடவடிக்கை மேற்கொள்ளத் தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

- ❖ அனைத்து வகையான கடன்களுக்கும் உரிய காலத்தில் அறிவிப்பு அனுப்புதல், தவணை தவறிய உறுப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்பி தாவா மனு தயாரித்தல், நிர்வாக அனுமதி பெற்று உரிய மன்றத்தில் தாவா மனு தாக்கல் செய்தல், தீர்ப்பாணைகளின் மீது நிறைவேற்று நடவடிக்கை மேற்கொள்ளுதல், அது தொடர்புடைய பதிவேடுகள் பராமரித்தல். இப்பணிகளை மேற்கொள்வதில் காலதாமதமாகி காலாவதியாகும் கடன்களுக்கு நிதியிழப்பு ஏற்படின் அதற்கு இவரும் செயலாளரும் கூட்டுப் பொறுப்பு வகித்தல்.

❖ தணிக்கைக்கு தேவையான அனைத்து புள்ளிவிபரங்களையும் தயார் செய்ய உடனிருந்து உதவி செய்தல், வைப்புத் தொகை சேமிப்பு மற்றும் கடன் வசூல் பணியில் சங்கத்தின் வேலை நேரத்திற்கு முன்பும், பின்பும் முழு ஈடுபாட்டுடன் கலந்து கொள்ளுதல் இப்பணியில் அனைத்து பணியாளர்களுடன் இணைந்து பணிபுரிதல்.

❖ சங்கத்தின் நிதிநிலை உயர்த்துவதற்கு வைப்புத் தொகை திரட்டுதல், அனைத்து வகையான வைப்புகள் தொடர்பான பதிவேடுகளில் பதிவுகள் மேற்கொள்ளுதல், பதிவுகளுக்கு செயலாளர் சுருக்கொப்பம் பெறுதல், கடன் பேரேடு, கடன் பட்டுவாடா பேரேடு, கடன் நிலுவை பேரேடு, தவணை தவறிய கடன் நிலுவை பேரேடு, நடவடிக்கை விபரப் பதிவேடு, உறுப்பினர் பொறுப்பு பதிவேடு, இதர கடன் பேரேடுகள் மற்றும் நகைக்கடன் அனைத்து வகை வைப்புகளுக்கான நிலுவைப் பேரேடுகள் பராமரித்தல், பதிவுறு செய்தல் அவைகளில் செயலர் ஒப்பம் பெறுதல்.

❖ அனைத்து வகையான வைப்பீடுகளுக்கும் காலமுறை வட்டி வழங்க தேவையான நடவடிக்கை மேற்கொண்டு வைப்பீட்டின் பதிவேட்டு பக்கத்தில் வட்டி பதிவுகளை மேற்கொள்ளுதல்.

❖ மேற்சொன்ன பணிகள் தொடர்பான அனைத்து ஆவணங்களையும், பதிவேடுகளையும், தம் பொறுப்பில் வைத்து பாதுகாத்தல்.

❖ துறை / மத்திய வங்கி / ஆய்வு அலுவலர்கள் அவ்வப்போது கோரும் புள்ளி விபரங்களை தயார் செய்து செயலாளரின் ஏற்புக்கு வைத்தல், அனைத்துப் பணியாளர்களுடன் சேர்ந்தும் தனித்தும் வைப்பீடு சேகரிப்பு கடன் வசூல் பணியினை மேற்கொள்ளுதல் சங்கப் பணிகள் தொடர்பாக தலைவர் அவ்வப் போது எழுத்து மூலமாகவும், வாய்மொழியாகவும் பிறப்பிக்கும் பிற பணிகளை மேற்கொள்ளுதல்.

**<u>சங்கத்தில் பராமரிக்கப்படும் பதிவேடுகள் விபரம் :</u>**

| வ. எண். | கணக்குகள் , புத்தகங்கள் மற்றம் பதிவாணங்கள் |
|---|---|
| 1 | தீர்மான புத்தகம் |
| 2 | கூட்டங்களுக்கான அலுவல் பட்டியல் மற்றும் குறிப்பு மற்றம் அறிவிப்புகள் (அஜந்தா பதிவேடு ) |
| 3 | அங்கத்தினர்களின் விண்ணப்பம் |
| 4 | பிரவேச புத்தகம் |
| 5 | நியமன பதிவேடு |
| 6 | இணை அங்கத்தினர் புத்தகம் |
| 7 | ரொக்க புத்தகம் ( ரொக்க சிட்டா ) |
| 8 | இரசீது புத்தகம் ( ரொக்கம் மற்றும் முஜரா ) |

| வ. எண். | கணக்குகள் , புத்தகங்கள் மற்றம் பதிவாணங்கள் |
|---|---|
| 9 | முதல் நிலை தினப்பதிவேடு மற்றும் துணைநிலை தினக்குறிப்பேடு |
| 10 | நிரந்தர வைப்பு புத்தகம் |
| 11 | வைப்புகளுக்கான கடன் பதிவேடு |
| 12 | அங்கத்தினர்கள் பெற்ற கடன்கள் அல்லது செய்த முதலீடு கெடுத் |
| | தேதிகளுக்கான நாட்குறிப்பு |
| 13 | பெறப்பட்வேண்டிய அனாமத்து கணக்கு பதிவேடு (Due to ) |
| 14 | கொடுபட வேண்டிய அனாமத்து கணக்கு பதிவேடு (Due by ) |
| 15 | பொது பேரேடு மற்றும் இதர துணைநிலை பேரேடுகள் ( General Ledger) |
| 16 | வரவுகள் மற்றும் செலவுகள் மாதாந்திர விபர குறிப்பு பதிவேடு அல்லது |
| | மாதாந்திர இருப்பு நிலைப் பதிவேடு |
| 17 | பொதுப் பேரேடு நிலுவைகளுடன் சரிகட்டு செய்யப்பட்ட பேரேடு |
| | நிலுவைப்பதிவேடு ( Talling Register ) |
| 18 | காசோலை புத்தகப் பதிவேடு ( வழங்குதல் மற்றும் பெறுதல் ) |
| 19 | கடன் உறுதிமொழிகளின் பதிவேடு |
| 20 | அங்கத்தினர்களின் பொறுப்பு பதிவேடு |
| 21 | அங்கத்தினர்களின் சொத்து விபர அறிக்கை பதிவேடு |
| 22 | அங்கத்தினர்களால் பயிர் செய்யப்படும் நிலங்களின் பதிவேடு |
| 23 | கடன் வரம்பு விபர அறிக்கை |
| 24 | காப்புநிதி மற்றும் இதர நிதிகளின் பதிவேடு |
| 25 | அரசிடமிருந்து அல்லது மற்ற நிறுவனங்களிடமிருந்து பெற்ற உதவிகள் (மானியங்கள்) |
| 26 | தவணை தவறிய கடன்கள் பதிவேடு |
| 27 | மீட்புரிமை அடைப்பு செய்யப்பட்ட கடன்கள் பதிவேடு |
| 28 | தாவா மற்றும் நிறைவேற்றுதலுக்கான விண்ணப்பங்கள் பதிவேடு |
| 29 | தவணை தவறிய அங்கத்தினர்களின் அசையா சொத்துகளின் சங்கம் ஏலத்தில் வாங்கியது குறித்த பதிவேடு |
| 30 | சங்கத்திற்கு உரிமையான அசையா சொத்துகளின் பதிவேடு |
| 31 | சங்கத்திற்கு உரிமையான வாகனங்களின் பதிவேடு |
| 32 | தளவாடச் சாமான்கள் பதிவேடு |
| 33 | தினசரி குறிப்பு பதிவேடு |
| 34 | ஈவுத் தொகை பதிவேடு |
| 35 | அங்கத்தினர்கள் மிகை ஊதியப் பதிவேடு |
| 36 | விலை நிர்ணய ( விலை மதிப்பீடு ) பதிவேடு |
| 37 | பொருட்கள் ( இருப்பு ) பதிவேடுகள் |
| 38 | சரக்கீட்டு கடன்கள் வழங்கப்பட்ட பொருட்களின் பதிவேடு |
| 39 | கொள்முதல், வழங்குதல் மற்றும் இருப்பு பதிவேடு |

| வ. எண். | கணக்குகள் , புத்தகங்கள் மற்றம் பதிவாணங்கள் |
|---|---|
| 40 | விற்பனை ரசீது புத்தகங்கள் விற்பனை் சிட்டா |
| 41 | விற்பனையாளர் தேவைப்பட்டியல் புத்தகங்கள் அல்லது பதிவேடுகள் |
| 42 | விற்பனையாளருக்கு வழங்குதல் பதிவேடு |
| 43 | விற்பனையாளர்கள் பொறுப்பு பதிவேடு |
| 44 | காலி சாக்கு இருப்புப் புத்தகம் |
| 45 | பொது நடப்பு அல்லது கடித போக்குவரத்து பதிவேடு |
| 46 | பருவக்கால நடப்பு பதிவேடு மற்றும் பருவகால அறிக்கைகள் |
| 47 | ஊழியர்கள் வருகைப் பதிவேடு |
| 48 | ஊழியர்களின் இயக்கப் பதிவேடு |
| 49 | வருகையாளர் குறிப்பு பதிவேடு |
| 50 | தற்செயல் விடுப்பு பதிவேடு |
| 51 | தற்செயல் விடுப்பு விண்ணப்பங்கள் |
| 52 | இதர விடுப்பு விண்ணப்பங்கள் |
| 53 | பணிப்பதிவேடு ( Sevice Register ) |
| 54 | வருங்கால வைப்பு நிதி பதிவேடு |
| 55 | பணியாளர்கள் கடன் பதிவேடு |
| 56 | புத்தகங்கள் மற்றும் படிவங்களின் இருப்பு பதிவேடு |
| 57 | நூல்நிலைய புத்தகங்கள் பதிவேடு |
| 58 | தபால் பதிவேடு |
| 59 | அனுப்புகைப் பதிவேடு |
| 60 | தபால் செலவு அல்லது தபால் வில்லை கணக்கு பதிவேடு |
| 61 | நிலுவைகளுக்கான ஒப்புகை அறிவிப்பு |
| 62 | ஒப்புகை பெறப்பட்டது ஆனால் வருடாந்திர தணிக்கை குறிப்பில் ஏற்கப்படாதது |
| 63 | இறுதி தணிக்கை அறிக்கை ( Audit Report ) |
| 64 | தணிக்கை குறைநிவர்த்தி பதிவேடு |

## பொது விநியோகத் திட்டம்

இந்தியாவிலுள்ள மாநிலங்களில் தமிழ்நாட்டில் அனைவருக்குமான பொது விநியோகத் திட்டம் செயல்படுத்தப்படுவதால், பொதுமக்கள் அனைவருக்கும் குறிப்பாக நலிவுற்ற மற்றும் ஏழை மக்களுக்கு உணவுப் பாதுகாப்பினை உறுதி செய்வதில் இது முக்கிய பங்கு வகிக்கின்றது. பொது மக்களுக்கு அத்தியவாசியப் பொருட்கள் சரியான நேரத்தில் மற்றும் முறையாக விநியோகிக்கப்படுவதை உறுதிசெய்யும் பொருட்டு கூட்டுறவு சங்கங்கள் மாநிலம் முழுவதும் **24,058** முழு நேர மற்றும் **9,644** பகுதி நேர நியாய விலைக்கடைகளை நடத்தி வருகின்றன. கூட்டுறவு சங்கங்கள் பரவலான விநியோக தொடரமைப்பை கொண்டுள்ளன மற்றும் மாநிலத்தில் உள்ள மொத்த நியாய விலைக்கடைகளில் 96.87% நியாயவிலைக் கடைகளை கூட்டுறவு சங்கங்கள் நடத்தி வருகின்றன.

தமிழ்நாட்டில் 27 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டகசாலைள், 57 கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள். 10 பிரதம கூட்டுறவு பண்டகசாலை மற்றும் 2 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள் உள்ளிட்ட 96 முதன்மைச் சங்கங்கள் மூலம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக கிடங்குகளிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அரிசி, சர்க்கரை மற்றும் கோதுமை ஆகிய அத்தியாவசியப் பொருட்கள் நகர்வு செய்யப்படுகின்றன. இந்த முதன்மைச் 4155 இணைப்புச் சங்கங்கள் நடத்தும் நியாயவிலைக் கடைகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை நகர்வு செய்து வருகின்றன. இதைத்தவிர 9 நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகளும், 31 கூட்டுறவு விற்பனைச் சங்கங்களும், 144 பிரதம கூட்டுறவு பண்டகசாலைகளும், 120 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களும், 7 பெரும்பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும், 16 நகர கூட்டுறவுக் கடன் சங்கங்களும் மற்றும் 3 இதர வகை கூட்டுறவுச் சங்கங்களும், ஆக மொத்தம் 330 கூட்டுறவுச் சங்கங்கள் சுயஎடுப்பு சங்கங்களாக செயல்பட்டு வருகின்றன.

சேலம் மாவட்டத்தில் 1260 முழு நேரக் கடைகளை 459 பகுதிநேர கடைகளை 221 கூட்டுறவு நிறுவனங்கள் நடத்தி வருகிறது. மேலும் இம் மாவட்டத்தில் 3 சங்கங்கள் முதன்மைச் சங்கங்களாகவும், 5 சங்கங்கள் சுயஎடுப்பு சங்கங்களாகவும் செயல்படுகிறது. இம்மாவட்டத்தில் 9 நுகர்பொருள் வாணிப கிடங்கிலிருந்து பொது மக்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்கள் நகர்வு செய்யப்படுகிறது.

## தணிக்கை

ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட சங்கமும் கணக்குகளை பராமரிக்கப்பட வேண்டும் அவ்வாறு பராமரிக்கப்பட்ட கணக்குகளை அரசு தணிக்கையாளரால் அல்லது தணிக்கை நிறுவனங்களால் ஒவ்வொரு நிதிஆண்டிலும் குறைந்தது ஒரு முறையாவது தணிக்கை செய்யப்பட வேண்டும்.

ஒவ்வொரு நிதிஆண்டும் முடிந்த மூன்று மாதங்களுக்குள் தணிக்கை முடிப்பதற்கு தேவையான , நிதிநிலை அறிக்கைகள் மற்றும் இதர இணைப்புகள் பதிவு பெற்ற சங்கத்தால் தயாரிக்கப்பட வேண்டும். அவ்வாறு பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் கணக்குகள் நிதிஆண்டு முடிந்த ஆறுமாத காலத்திற்குள் முடிக்கப்பட வேண்டும்.

தணிக்கையாளர் தணிக்கை செய்யும் சங்கத்தைச் சார்ந்த அனைத்து கணக்குகளையும், புத்தகங்களையும், பத்திரங்களையும், ரொக்கத்தையும், மற்றும் இதர சொத்துகளையும் நியாயமான அனைத்து காலங்களிலும் தாராளமாக பார்வையிட சங்கத்தலால் வசதி அளிக்கப்பட வேண்டும். மேலும் தணிக்கையாளர் கோரும் சங்கம் தொடர்பான வரவு செலவுகள் மற்றும் செயல்பாடு குறித்த தகவல்களை கொடுத்தல் வேண்டும்.

தணிக்கையின் போது வெளிபடுத்தப்படும் குறைபாடுகளை தணிக்கை அறிக்கை கையொப்பமிட்ட நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் குறைபாடுகள் நிவர்த்தி செய்த அறிக்கை அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரத்தை துணைபதிவாளர் அவர்களுக்கு தெரிவிக்கப்பட வேண்டும்.

பதிவு செய்த சங்க விண்ணப்பத்தின் பேரிலோ அல்லது வேறு வகையில் சங்கத்தின் எந்த ஒரு கணக்கையோ மறுதணிக்கை செய்வது அவசியம் என்று கருதினால் பதிவாளர் ஆணைப் பிறப்பப்பதின் பேரில் சங்கத்தின் கணக்குகளை மறுதணிக்கை செய்யலாம்.

தணிக்கை முடிந்தபின்பு சங்கம் வெளியிட வேண்டியது 1) தணிக்கை சான்று, 2) லாப நட்ட கணக்கு, 3) இருப்புநிலை குறிப்பு இவை அனைத்தும் சங்கத்தில் எந்த ஒரு உறுப்பினரும் ஆய்வு செய்வதற்கு தயார் நிலையில் வைத்திருக்க வேண்டும். இதனை சங்கத்தின் பொதுப்பேரவையில் படித்திட வேண்டும்.

கூட்டுறவே !  நாட்டுயர்வு !!